**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ம் தேதி திங்கட் கிழமை காலை 11.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

இந்நகர் மன்றத் தீர்மானம் எண்.333 நாள்.30.12.2020ன்படி இந்நகராட்சி பேரறிஞர் அண்ணா தினசரி சந்தையில் கட்டப்பட்டுள்ள கடைகளுக்கு கடை ஒன்றுக்கு நாள் வாடகையாக ரூ.50/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி 01.07.2021 முதல் நாள் வாடகையாக கடை ஒன்றுக்கு ரூ.50/– வீதம் அலுவலகம் மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் 25.11.2021 அன்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் நடத்தப்பட்ட காணொளி காட்சியில் வரியில்லா இனங்கள் தொடர்பாக ஆய்வுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவில் இந்நகராட்சி தினசரி சந்தையில் அமைக்கப்பட்ட கடைகளுக்கு நிர்ணயம் செய்யப்பட்ட நாள் வாடகை ரூ.50/–ஐ குறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. எனவே ஏற்கனவே கடை ஒன்றுக்கு நாள் வாடகை ரூ.50/– என்பதை ரூ.75/– என நிர்ணயம் செய்து 01.12.2021 முதல் வாடகை வசூல் செய்யுவும் பொது ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.4959/2020/அ3)

**தீர்மான எண். 631**

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)S.ரவிச்சந்திரன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.